பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 03 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நேர்மையாக வரி செலுத்துவோரே நாட்டின் சிறந்த தேசபக்தர்கள் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கொல்கத்தாவில் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார்.

3. தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கு இடையே இயக்கப்படும் ரயில்களின் பயண நாட்களை ரயில்வே அமைச்சகம் அதிகரித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

4. அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் நோக்கத்தில் பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

5. உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கி இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நேர்மையாக வரி செலுத்துவோரோ நாட்டின் சிறந்த தேசபக்தர்கள் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற வருவாய் துறை அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்பில் உரையாற்றிய அவர், நாட்டின் நிதி வலிமையின் காவலர்களாக வருவாய்த்துறை அதிகாரிகள் திகழ்வதாக பாராட்டினார்.

வரி மூலம் திரட்டப்படும் வருவாயினால் மட்டுமே நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகளை சாத்தியமாக்க முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

வரி ஏய்ப்பு நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும் அதேவேளையில் வரி செலுத்துவோருக்கு தேவையற்ற இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சட்டவிரோத வருமானங்களைக் கண்டறிய வேண்டும் என்றும், அதேநேரத்தில் நேர்மையான மற்றும் சட்டப்பூர்வமாக வருவாய்

ஈட்டுபவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்றும் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் சுமார் 18 ஆயிரத்து 680 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், சுமார் 16 ஆயிரத்து 990 கோடி ரூபாய் மதிப்பிலான 420 கிலோ மீட்டருக்கும் அதிக நீளம் கொண்ட தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதில் மேற்குவங்கம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலை-19 மற்றும் மேற்குவங்கத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலை-114 ஆகியவற்றின் குறிப்பிட்ட பகுதிகள் திறந்து வைக்கப்பட உள்ளன.

இத்திட்டங்கள் பயண நேரத்தைக் குறைப்பதோடு, பிராந்திய இணைப்பையும் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஹால்டியா கப்பல் கட்டும் வளாகத்தில் சரக்குகளை விரைவாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றியும் கையாளும் வகையில் எந்திரமயமாக்கல் திட்டத்தைப் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

அம்ரித் பாரத் ரயில் நிலையத் திட்டத்தின்கீழ் மறுமேம்பாடு செய்யப்பட்ட 6 ரயில் நிலையங்களையும் அவர் திறந்து வைக்கிறார்.

தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கு இடையே இயக்கப்படும் ரயில்களின் பயண நாட்களை அதிகரிக்கும் கோரிக்கையை ரயில்வே அமைச்சகம் ஏற்றுக்கொண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து திருச்சி - காரைக்குடி, காரைக்குடி - விருதுநகர், காரைக்குடி - திருச்சி, விருதுநகர் - காரைக்குடி வழித்தடத்தில் வாரத்திற்கு 6 நாட்கள் இயக்கப்பட்டு வந்த ரயில்கள் தினசரி ரயில்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை - போடிநாயக்கனூர் மற்றும் போடிநாயக்கனூர் - சென்னை வழித்தடத்தில் வாரம் 3 நாட்கள் இயக்கப்பட்டு வந்த விரைவு ரயில் 6 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இந்த அறிவிப்புகளை வெளியிட்ட பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவுக்கும் மாநில மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஒரே பாரதம் - உன்னத பாரதம் திட்டத்தின் கீழ், இளைஞர் சங்கமம் 6-வது கட்ட நிகழ்வில் பங்கேற்குமாறு நாடு முழுவதிலும் உள்ள இளைஞர்களுக்கு மத்திய கல்வி அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கான பதிவுகள் தொடங்கியுள்ளதாகவும் விண்ணப்பங்களை அனுப்ப இந்த மாதம் 18-ஆம் தேதி கடைசி நாள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள இளைஞர்கள் **ebsb.aicte-india.org** என்ற இணையதளத்திற்குச் சென்று தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்தத் திட்டம், இளைஞர்களுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்குச் சென்று, அங்குள்ள செழுமையான கலாச்சார பாரம்பரியம், பாரம்பரிய முறைகள் மற்றும் புதுமையான கண்டுபிடிப்பு சூழல்களை நேரடியாக அனுபவிப்பதற்கான

வாய்ப்பை வழங்குகிறது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அனைத்து மக்களும் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் திமுக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் அகரம் மற்றும் தாடிக்கொம்பு பேரூராட்சிகளில் நேற்று நடைபெற்ற விழாவில் முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தால் தமிழகத்தில் ஒரு கோடியே 47 லட்சம் பெண்கள் பயனடைந்து வருவதாக கூறினார்.

அவர்களுக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாயை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்துவதே அரசின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடிசையற்ற தமிழகத்தை உருவாக்க முதற்கட்டமாக ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில்,

மேலும் ஒரு லட்சம் வீடுகள் கட்ட மாநில அரசு நிதி ஒதுக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தில் தொடங்கப்பட்ட பல்வேறு தொழிற்சாலைகள் மூலம் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

மன்னார்குடியில் நேற்று இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கிப் பேசிய அவர், திருவாரூர் மாவட்டம் ஆலங்கோட்டைப் பகுதியில் மினி சிப்காட் அமைக்கப்பட உள்ளதாக கூறினார்.

திருப்பூரில் இருந்து நூல் கொண்டு வந்து அதனை ஆடைகளாக மாற்றும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதாகவும், இது சாயப்பட்டறை என்று எதிர்க்கட்சிகள் கூறுவது தவறான தகவல் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தால் தமிழகத்தில் ஏராளமான விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தால் வழங்கப்படும் தொகை, வேளாண் இடுபொருட்கள் வாங்க பயன்படுவதாக நாகை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

**(Voice Byte - Farmer - 25 Sec)**

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

ரஷ்யா மீது பொருளாதார தடை விதித்த அமெரிக்கா, அந்நாட்டிடமிருந்து கச்சா எண்ணெயை வாங்கிக்கொள்ளுமாறு இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுக்கு திடீரென அனுமதி வழங்கியிருப்பது ஏன் என்று ஈரான் வினவியுள்ளது.

-------------

அமெரிக்கா நடத்திய ராணுவ தாக்குதலால் ஈரான் இனி அணு ஆயுதத்தை தயாரிக்க முடியாது என்று அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vanes கூறியுள்ளார்.

-------------

ரயில்வே துறையில் சாதனை படைத்த பெண் ஊழயிர்களுக்கு புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் விருதுகளை ரயில்வே வாரிய தலைவர் திரு. சதீஷ்குமார் வழங்கினார்.

-------------

மகாராஷ்டிர மாநிலம் புனேயில் நேற்றிவு கட்டுமானப் பணியின்போது ஏற்பட்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

-------------

திண்டுக்கல் மாநகராட்சி சார்பில் கோபாலசமுத்திரக்கரையில் சுதந்திரப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு கட்வெட்டினை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி நேற்று திறந்து வைத்தார்.

-------------

தேனி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளுக்க மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. ரஞ்சித் சிங் உத்தரவிட்டுள்ளார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் கல்வி நிறுவனங்களுக்கு பசுமைச் சாம்பியன் விருதுகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி நேற்று வழங்கினார்.

-------------

பெரம்பலூர் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மாவட்ட நிர்வாகத்தால் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் மட்டுமே பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. மிருனாளினி கூறியுள்ளார்.

-------------

ராமநாதபுரம் நகராட்சியில் 25 ஊரணிகளை பாதுகாக்க 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர் மேலாண்மைத் திட்டத்தை நேற்று மாவட்ட ஆட்சியர் திரு. சிம்ரன்ஜித் சிங் காலோன் தொடங்கி வைத்தார்.

-------------

சென்னை வேளச்சேரி - பரங்கிமலை இடையே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த புறநகர் மின்சார ரயில்சேவை இன்று காலை தொடங்கியது.

-------------

சென்னை திரு.வி.க. நகர் பகுதியில் **300** கர்ப்பிணிப் பெண்களுக்கு மாநகராட்சி சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நேற்று நடைபெற்றது.

-------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கி இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா **1-0** என்ற கோல் கணக்கில் இத்தாலியை வென்றது.

இன்று இரவு **7.30** மணிக்கு நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

-------------

**CapCana** சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் **Neil Oberleitner** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**